முற்பகல் 10-55

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அது சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பெயில்யூர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தத் தடுப்பு ஊசி வெரி காஸ்ட்லி. அதை முறைப்படி 3 டோஸ்கள் பயன்படுத்த வேண்டும். முதலில் ஒரு டோஸ் போட்டு, 6 அல்லது 7 மாதங்கள் இடைவெளிக்குப் பின்பு அடுத்த 2 டோஸ்களைப் போட்டு, பின்பு ஒரு பூஸ்டர் டோஸ் போட வேண்டும். இது காஸ்ட்லி என்பதால் அதை யாரும் முறையாகப் பயன்படுத்திப் பார்க்கவில்லை. அதனால், பெயில்யூர் ஆகிவிட்டது. எனவே, மீண்டும் அமைச்சரவர்கள் அதைப் பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. எனவே, அதிலே என்ன விலை என்பதைப் பற்றி பிரச்சினையில்லை. பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. அப்படி பரிசோதனைக்காகக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் என்ன முறையில் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆராய்ச்சி நிலையத்திலே சொன்னார்களோ, அந்த முறையில் தான் பயன்படுத்தியிருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, அப்படிப் பயன்படுத்தி, அந்த ரிசல்ட் சரியாக இல்லை. நாம் எதிர்பார்த்த அளவுக்கு அதிலே வெற்றிகரமாக இல்லை என்று அந்த ஆராய்ச்சி நிலையத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, பல இடங்களில், எங்கெங்கே மூளைக் காய்ச்சல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இதைக் கொடுத்து பரிசோதித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு மத்திய அரசினுடைய அந்த ஆராய்ச்சி நிலையம் மீண்டும் இதைப் பரிசோதித்து, நமக்குக் கொடுக்கும்போது அதைப் பயன்படுத்தலாம். நம்மிடத்திலே அதைத் தடுப்பதற்கான எந்த மருந்தும் இல்லை என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 442, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

442—

நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக உதவி மருத்துவர் நியமனம்.

*11240—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

(அ) சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக உதவி மருத்துவர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்பொழுது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சீர்காழி தொகுதி நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆண் மருத்துவர் ஒருவரும் பெண் மருத்துவர் ஒருவரும் பணிபுரிந்து வருகிறார்கள். புதிதாக மருத்துவர்களை நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் அடங்கியுள்ள நல்லூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. அதைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. கிராமப் பகுதியாக இருப்பதாலும், ஏழை மக்கள் அதிகமாக இருப்பதாலும் அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டாலோ அல்லது நோய் ஏற்பட்டாலோ அவர்கள் மற்ற வெளி மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாமல், அருகாமையில் நல்லூரில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வந்து, தங்களுடைய உடல்நிலையைப் பார்த்துக்கொள்கிறார்கள். மேலும், பொதுமக்கள் அங்கே அதிகமாக வருவதால் அனைவரையும் ஒரே நேரத்தில் பார்க்க முடியாத சூழ்நிலை சில நேரங்களில் ஏற்படுகிறது. எனவே, இந்த நிலையைப் போக்க நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக ஒரு உதவி மருத்துவர் நியமனம் செய்ய, ஏழை மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டு வரும் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு மருத்துவர்கள் இருக்க வேண்டுமென்ற நியதியைத்தான் நாம் வைத்திருக்கிறோம். எனவே, இங்கும் 2 மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, புதிதாக, கூடுதலாக ஒரு மருத்துவரை நியமிக்கும் வாய்ப்பு இல்லை. இந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமா என்பதைப்பற்றி வேண்டுமானால் ஆய்வு செய்யச் சொல்லலாம். அங்கே வருகின்ற நோயாளிகள், அதைச் சுற்றி எவ்வளவு தூரத்தில் மருத்துவமனை இருக்கிறது என்பதை எல்லாம் அடிப்படை

யாக வைத்து, தரம் உயர்த்துகிற வாய்ப்பு ஏற்படும் போது வேண்டுமானால் கூடுதலாக மருத்துவர்கள் அங்கே வர வாய்ப்பு இருக்கும். எனவே, அதை உறுதியாக என்னால் இப்போது சொல்ல முடியாது. என்றாலும், அதைத் தரம் உயர்ந்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி ஆய்வு செய்யும்படி துறைக்குச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடத்தல்.

*15250—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் நடத்த அவருக்கு அதிகாரம் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களின் தலைமையில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மேலும் இது மிகச் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமே முழுப்பொறுப்பையும் தந்து, அந்தச் செயல்பாடுகளை அவர்கள் கவனிப்பார்களானால், நன்றாக இருக்கும். இது குறித்து விளம்பரங்கள் செய்யவும், குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வருகின்றவர்களை அழைத்து வரவும், அவர்களைக் கவனிக்கவும், மீண்டும் அவர்களை அழைத்துச் செல்லவும், அவர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளைச் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சிறப்பாகச் செயல்பட முடியும். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்வதை மாத்திரம் வைத்துக்